உ

சிவமயம்



தென்மயிலை வாசரும்

சுன்னாகம் மின்சார நிலைய
இயந்திரப் பொருத்துநருமான

# திரு. த. செல்வராசா

அவர்கள்

சிவபத மெய்தியமை குறித்த

# நினைவு மலர்

1984-07-01

# சமர்ப்பணம்

கட்டுவனூர் கவிஞர் விசுவப்புலவராற் பாடப்பெற்றதும், நீண்ட காலமாகத் தென்மயிலை அலவத்தை வீரபத்திரர் ஆலயத்திற் பக்தி சிரத்தையுடன் இளைஞர்களாலும், முதியவர்களாலும் ஆடிப் பாடப் பெற்றதுமான வசந்தன் கோலாட்டப் பாடல்களை அமரர் திரு. தம்பிராசா செல்வராசா அவர்கள் நினைவாக ஈண்டு வெளியீடு செய்கின்றோம்.

உ

அமரர்

# திரு. தம்பிராசா செல்வராசா அவர்கள்



| மலர்வு : | உதிர்வு : |
| --- | --- |
| 19-01-1944 | 01-06-1984 |

## நினைவாஞ்சலி

முன்னோர் ஊட்டிய மூதறிவும் மூத்தோர்
நன்னெறிப் பண்பும் நிறைந்தோய்! - குன்றின்
குன்றாத் தீபமெனக் கோதிலா முத்தியில்
நின்று நிலைக்க நேர்.

உ

# அமரர் திரு. தம்பிராசா செல்வராசா

## அவர்களின் வரலாறு

**குலப்பேறு:**

ஈழவள நாட்டின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாண நன்னகராகும். அதன் வடபால் அமைந்துள்ளதும், பல்வளஞ் சிறக்கப் பெற்றதும், சான்ருேருடன் நல்லறிஞர் வாழ்வது மான தென்மயிலேயின்கண் தொல்புகழ் மேவும் சைவ வேளாண் மரபில் வழி வழி வந்த வீரசிங்கம் - தம்பிராசா, முருகேசு - மாணிக்கம் தம்பதிகளின் மூத்த புதல்வஞக எமது வரலாற்று நாயகன், திரு. தம்பிராசா செல்வராசா அவர்கள் கடந்த சுபானு வருடம், தை மாதம் ஆரும் நாளில் வந்த விசாக முதலாம் பாத நட்சத்திர வேளேயிற் (1944-01-19) பிறந்தார்.

இவருடன் திருமதி. குலேந்திரன் நல்லம்மா, திருமதி. அரியராஜசிங்கம் தவமணி, திருமதி. யோகராசா நாகம்மா திரு. தருமராசா, திரு. வேலாயுதம், திரு. கந்தசாமி, திரு. ஜெயராசா, திரு. தவராசா என்போர் உடன் பிறப்புகளாகப் பிறந்தனர்.

**கல்விப்பேறு:**

பாலப் பருவத்திலேயே கூரிய விவேகமும் நுண்ணறி வுங் கொண்ட திரு. செல்வராசா, யாழ். மயிலிட்டி தெற்கு ஞானேதய வித்தியாலயத்தில் தன் கல்வியைத் தொடங்கி யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் முடித்தார். அதன் பின்னர் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் இயந்திரவியலே மேற்கொண்டு பட்டமும் பவிசும் பெற்ருர். அத்துடன் வாஞெலி இயந்திரவியலிலும் தன் நுண்மாண் நுழைபுலத்தாற் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ருர்.

தான் பிறந்த மண் வாசனேக் கிணங்க, இயல்பாகவே இசையிற் பெருநாட்டங் கொண்ட இவர், தன் பள்நாளிள்

களிற் பண்ணிசையிலும் மெல்லிசையிலும் பேறுகள் பல பெற்றதோடு பரிசுகளும் பெற்றுப் பிறந்த குடிக்குப் பேரும் புகழும் ஈட்டித் தந்தார்.

அத்துடன், இவர் கட்டுவனூர்ன் மரபுக் கலையாக விளங்கும் வசந்தன் கோலாட்டப் பாடல்களை அட்சர சுத்தமாகவும், தாளலய இசையாகவும் பாடவல்ல கலைஞனுகவுந் திகழ்ந்தார். மேலும், நவராத்திரி, திருவெம்பாவைக் காலங்களில் இறை சிரத்தையோடு பஜனைகள் செய்வதிலும் வல்லவராக விளங்கினர்.

தொழிற்பேறு:

மின் இயந்திரவியலில், தொழில் வல்லுநராக இருந்த காரணத்தால் 1965ம் ஆண்டில் மயிலிட்டி கிராமசபையின் மின் இணைப்பாளராகத் தொழிலை மேற்கொண்ட திரு. செல்வராசா 1969 ல் சுன்னுகம் மின் நிலையத்தில் இயந்திரப் பொருத்துநராகத் (Mechanical Fitter) தொழிலுயர்வு பெற்றுர். இலக்சபானு, மின்னேரியா போன்ற தென்னிலங்கைப் பிரதேசங்களிற் கடமையாற்றிய இவர், 1976 இல் இரண்டாந் தரப் பதவியுயர்வுடன் மன்னுர் மின்நிலையத்துக்குச் சென்ருர். அங்கிருந்து கொண்டே தலைமன்னுர், முருங்கன், பேசாலை போன்ற இடங்களுக்கும் பொறுப்பான கடமைகளுக்குச் சென்று, தன் தொழிற் திறமையைக் காட்டி நின்ருர். 1982ல் முதலாந்தர இயந்திரப் பொருத்துனராகப் பதவி உயர்வு பெற்று, மீண்டும் சுன்னுகம் மின் நிலையத்துக்கு வந்தார்.

தான் தொழில் பார்த்த இடங்களில் எல்லாம், தன் சக ஊழியர்களின் நண்பனுகவும், மேலதிகாரிகளின் மதிப்பார்ந்த விசுவாசியாகவும் திரு. செல்வராசா விளங்கினர்.

திருமணப்பேறு:

தம்முறவில் வந்த நல்லையா - பாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வியான சரோஜினிதேவியை 1975ல் திருமணஞ் செய்து, மனைத்தக்க மாண்புடையராகிச் சுற்றமும் சூழலும் பேணி இனிது வாழ்வாராயினர்.

சிவப்பேறு:

பிறக்கும் எந்தவோர் உயிரும் மூப்பு, பிணி, சாக்காடு எனும் மூவ் வினைகளினின்று விலகமுடியாது என்ற நியதிக்கேற்ப, திரு செல்வராசா அவர்களும் நிகழும் இரத்தாக்ஷி வருடம் வைகாசி மாதம் பத்தொன்பதாம் நாளன்று வந்த மிருகசீரிட நட்சேத்திரமும் பூர்வபட்ச துதியையும் கொண்ட திதியில் (1984-06-01) இம் மண்ணுலக வாழ்வை நீத்து, சிவன் சேவடி நீழலையடைந்து, சிவப்பேறு எய்தினர்.

ஓம் சாந்தி

தொகுப்பு: அநு. வை. நாகராஜன் அவர்கள்

உ

சிவமயம்

## தேவாரம்

பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுன்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே

## திருவிசைப்பா

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்காள் இவர்தந்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறுத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமணா வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினுல்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

## திருப்புகழ்

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறை வோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

# வசந்தன் நாடகம்

## 1. களவசந்தன்

### விருத்தம்

பூவார் தண்டலை கொளலவத்தை நகராதி பத்திரை புகர் மஞ்ஞளன்
நாவாற் செந்தமிழ் வீரபத்திரன்மேல் வசந்த நாடகம் நான்பாட
கோவார் சந்திர மௌலி கோடூரன் தந்த ஒற்றைக் கொம்பனை
தேவாதிதேவன் நம்கைப்பிள்ளை பொற்றுள் மறவாதென் சிந்தைதானே

### தரு

தென்னுதே னுதெனன் னேதே நாதெனத்
தெந்தென தென்னனே

1. செந்திரு வாழல வத்தை நகர்
சித்திர வத்திர செகத்திரத்தோன்
சுந்தரஞ் சேர்வீர பத்திரன்மேல்
சொற்றமிழ் சேர் வசந்தன் பாட — தென்னுதே

2. மந்திர வேதமு தற்பொருளாய்
வந்து கற் றேட்ட வளம்பதி வாழ்
சந்திரக் கொம்பரே ரம்பர் துணை
தாழ்மலர் என்றும் பணிவோமே — தென்னுதே

3. உந்து புகழல வத்தை நகர்
உத்தமி பத்திர காளியுடன்
வந்துறையுஞ் செய வீர பத்ர
வரதன் மேல் வசந் தன் பாட — தென்னுதே

4. செந்தமிழ்க் காரி துறட்டையிட்டி
சேரும் வயிரவ நாதருடன்
கந்த கிரு பாகர ருந்துணையாய்
கை தொழு தென்றும் பணிவோமே — தென்னுதே

5. ஆயிரஞ் சென்னியீ ராயிரங் கை
ஆனியி வர்பத்திர காளியுடன்
சேயெனும் வாழ்வீர பத்திரன் மேல்
சேரும் வசந்தனிசை பாட — தென்னுதே

6. தாயெனும் கம்பிலிற் கண்ணகையும்
தண்டமிழ் சேர் கரண்டைப் பதிவாழ்
தாயன் பெரும்படை நா தனை யன்
துணை யென் றென்றும் பணிவோமே — தென்னுதே

## 2. தன்னுள்

### தரு

தத்தனத னத்ததன தானித்த நத்ததன
தானத நத்ததன தானின

1. செக்கரஞ் சடை குலுங்க திரி சூல வேலிலங்க
செகசோதி தேரில் வாற தாரன்னே — தத்தனத
2. முக்கணுதி கற் பகப் போர் முதல்வன் முன்னுக வர
மூர்த்தி வீர பத்திரன் வாறுர் காண்மின்னே — தத்தனத
3. சங்கர சிவாய வென்று சிங்க வாகனத்திலேறி
தையல் பாக மாக வாற தாரன்னே — தத்தனத
4. புங்க மலேயைத் துளேத்து கங்கண மாகத் தரித்த
புயவீர பத்திர சுவாமி காண் மின்னே — தத்தனத
5. கண்டவர் நடுநடங்க சண்ட மாருதம் மொடுங்க
கனக வீதி தன்னில் வாற தாரன்னே — தத்தனத
6. முண்ட கன் முகுந்த ஞதி யண்டர்களே வென்ற சோதி
மூர்த்தி வீர பத்ர சுவாமி காண்மின்னே — தத்தனத
7. நித்திலத் தொடை புனேந்து பத்திரைப் பெண்ணே மணந்து
நித்தனேப் போல் வீதி வாறு தாரன்னே — தத்தனத
8. குத்திரத்தக் கன்யாகத்தைக் கத்தரித்த லவத்தை வாழ்
குல வீர பத்ர சுவாமி காண் மின்னே — தத்தனத

## 3. செல்லப்பிள்ளே

### விருத்தம்

மருத்திகளலங்கைப் பத்ரை மகிணுஞ் வீரபத்திரன்
உருத்திர னலவத்தைப் பேர் உயர்வளம் பொருந்தும் நாட்டில்
பெருத்த புத்தகத் தொடாணி பிடித்துமா நிருத்த மாடித்
திருத்தமிழ் விருத்தம் பாடிச் செல்லப்பிள்ளே தோற்றினுரே.

### தரு

நன்னேனுன நானேனுன நானேனுன நானே நான

1. மல்லல் வீர பத்ர சுவாமி வாழு மலவத்தை நாட்டில்
கல்லுருகப் பாடியாடிச் செல்லோப் பிள்ளே தோற்றினுரே
— நன்னே



2. சுத்தவரன் புத்ரனுன சுவாமி வீர பத்ர நாட்டில்
சித்திர வித்தாரங் கற்ற செல்லோப் பிள்ளே தோற்றினுரே
— நன்னே
3. உண்ட கறைக் கண்டனருள் உக்ரவீர பத்ர நாட்டில்
செண்டு மாலே முண்டாசிட்டு செல்லோப் பிள்ளே தோற்றி
ஞரே — நன்னே
4. வள்ளல் வீர பத்ரதேவர் வாழுமல வத்தை யென்னும்
செந்நெல் வயல் சூழும் நாட்டில் செல்லோப்பிள்ளே
தோற்றினுரே — நன்னே
5. வட்ட மிட்ட பொட்டிலங்க வாகுவல யந்துலங்க
திட்ட முடன் சட்டையிட்டு செல்லோப்பிள்ளே தோற்றி
ஞரே — நன்னே
6. கற்றவர் மனம் களிக்க காசினி மனம் செழிக்க
செற்றவர் பயந் தொழிக்கச் செல்லோப்பிள்ளே தோற்றி
ஞரே — நன்னே
7. மல்லல் வள மோங்கிடவும் வறுமைத்துயிர் நீங்கிடவும்
செல்லோப் பிள்ளே வீர பத்ர தேவ நாட்டில் தோற்றினுரே
— நன்னே

## 4. காப்பிலி

### விருத்தம்

பாற்புயல் மொழியாள் வீரபத்திரைக் கன்பனை
வேற்கர வீரபத்திரன் மேலேயோன் வாழு நாட்டில்
சூற்புய லிரிய வார்த்துத் துப்பாக்கி தோளில் வைத்து
காற்பிலிப் பறங்கிவந்து களரியிற் தோற்றினனே.

### தரு

தானத் தீனனே தனந்தன தானத் தீனனே

1. வாங்கு விற்பிடித்து கள்ளுண்டு மதவெறி யேப்பமிட்டு
காக்குஞ் சட்டையிட்டு கிஞ்ஞோரெனும் காப்பிலி தோற்றினனே
—தான
2. துள்ளித் துள்ளிக் குதித்து தரிகிட தொம் மென்று பண்பாடி
கள்ளுங் குடித்துக் கொண்டு ஏப்பமிட்டு காப்பிலி தோற்றினனே
—தான

3. வச்சிரச் சட்டையிட்டு தொப்பாரம் வயங்கச் சிரத்திலிட்டு
கைச் சோறுப் பீலாப் போர்த்து தொம் தெய்யென்று காப்பிலி
தோற்றினனே —தான

4. பை நாகந் தரித்த சடை வீர பத்திரன் வாழ் நாட்டில்
கிஞ்ஞோராம் வெலுச் சொல் பறங்கி சிறப்புடன் தோற்றினனே
—தான

5. ஊழின் வலியாலே பவத்துக் குரிய தென்றே ராமல்
நாளும் உயிர்க் கொலையை நடத்திடும் நாங்களே காப்பிலிமார்
—தான

6. மூப்பு முறை பாரோம் தரும முறைதனிலே சேரோம்
காப்பிலி மார்களையா நமக் கெதிர் காசினி தன்னிலுண்டோ
தானத்தினனே

## 5. மல்லக்கச் செட்டி

### விருத்தம்

வல்லொத்த தனத்தாள் பத்திரை மகிணனும் வீர சுவாமி
நல்லொப்பாய்ப் பொருந்தும் கீர்த்தி நாட்டலவத்தை நாட்டில்
கல்லொத்த புயத்தாராடக் கலன் பூட்டிக் 'கச்சை கட்டி
மல்லக்கச் செட்டி வந்து வயம் பெறத் தோற்றினரே

### தரு

தானனே தானனே தந் தான தனத்தன தானனே

1. பொன்னின் பகக்கங் கட்டிப் புலி பாலரை வெருட்டி
வன்னத்துடைகள் கட்டி மல்லக்கச் செட்டியும் தோற்றினரே
—தானனே

2. சங்கீத ராகம் பாடி குமனியக் காருஞ் சூடி
மங்காய்ச் சிரமமாடி மல்லக்கச் செட்டியும் தோற்றினன் —தானனே

3 கொக்கரித்துக் துடைகட்டிக் குனிந்து கொப்பாரங் கொண்டாடி
வக்ர துண்ட நகை காட்டி மல்லக்கச் செட்டியும் தோற்றினன்
— தான

4. சூறா வளியைப் போலே சுற்றிச் சுற்றியே வளைந்து
மாறான மற்பிடிக்கும் மல்லக்கச் செட்டியும் தோற்றினன் —தான

5. காலைத் தூக்கி மடித்து கைதனிலே ஒரு கோல்பிடித்து
வாலைப் பருவத்தோடு மல்லக்கச் செட்டியும் தோற்றினன்
—தானனே



6. பஞ்சம் பசிநோய் மாறப் பாவம் பழி தொலைய
வஞ்சியிடையார் நாட மல்லக்கச் செட்டியும் தோற்றினன்
— தானனே

## 6. சின்னக்கோன்

### விருத்தம்

வன்னிப் பாய்த் துகிலுடுத்து வைபிரச் சங்கிலிகள் பூட்டி
தன்னைப் பாரில்லை யென்று செய வீர பத்திரன் நாட்டில்
உன்னிப்பாய் எழுந்து துள்ளி ஒடுக்குவாய் மீடுக்கும் பேசி
சின்னக்கோன் களரி தன்னிற் சிறப்புடன் தோற்றினரே

### தரு

தனந் தனந்தன தான தம் தான தனந்தன தான

1. கன்னக்கோலா சின்னக்கோனே கழுதைகளெங்கே விட்டாய்
மகனே
என்னடி யாத்தாள் பின்னிட்டுக் கழுதைகள் இருப்புலிக் காட்டுக்
குள் கரம்பைக்குள் போச்சுது — தனந்

2. குறிப்பாகக் கழுதையை மறிக்க நான் போனேன்
கொழுத்துப் போய் நாவல்கள் பழுத்தங்கே யிருந்தன
பறிப்பே னென் றோடிப் போய்க் கறிப் பாலைக் கொடிக்குள்ளே
பதுங்கினேன் முசுறுகள் வளைந்த தென்றுத்தாள் — தனந்

3. வளைத்த முசுறுகள் கலைத்து வந் தொளிக்குது
எழுத்து விழுத்தடா சாலவை நொண்டி
நேரிக்க கழுதையை மேய்த்து வாவென்
றுய்ச்சி அருளின பேச்சினை

4. பாச்சல் வா முசு றீச்சு தடியம்மா
கூச்ச மினி யென்ன ஆச்சடி
என்னைத்தானே சின்னக் கோனென்
றெட்டுள திசையினர் வட்ட மிட்டார்
பொன்னைத் தந்தாற் கழுதையை விற்பேன்
புறப் படடா மூட சாலவை நொண்டி

5. கன்னிப் பருவச் சின்னப் பெண்ணைக்
கலந்து மனமது துலங்கவே
துன்னிக் கடி மணம் நண்ணிக் கொள்வகை
தொடர்ந்து செய மன மடங்குமோ — தனந்தனந்

## 7. நொண்டி

### விருத்தம்

முத்தமிழ்க் கொருவனுகி முதன்மைசேர் கின்ற வீர
பத்திர சுவாமி நல்ல பரிவுடன் வாழு நாட்டில்
கத்திகை பறித்துச் சீதக் கமலத்தாள் ளொன்று தூக்கி
தத்திப் பாய்ந் தெழுந்து நொண்டி சபை தன்னில் தோற்றினரே

### தரு

தானத்தேந் தானினதந்த தனதான - தந்த
நானத்தம் தானின தந்த தன தான

1. செக்கரஞ் சடை மகுடம் பரித்திட்ட
செயவீர பத்திர சுவாமி வாழு நாட்டில்
உக்கிர முடனடித்தே காலிற் றண்டை
உலவச் சாலவ நொண்டி தோற்றினரே — தானத்தம்

2. ஆரியத் துரை மார்கள் துதி செய்யும்
அலவத்தை மாநகர் குலவுக்கிரன்
பாரிபத்திரையுடன் வாழ் திருநாட்டில்
பார்த்திபர் புகழ் நொண்டி தோற்றினரே — தானத்தம்

3. இந்திர சாலமுடன் மஹேந்ர சாலம்
இயற்றும் செப்படி வித்தை சாதக வித்தை
மந்திர செக கரணம் கோகர்ணம்
மதிக்கும் வித்தை களெல்லாம் வல்ல நொண்டிநான் — தானத்தம்

4. நெருப்பையும் குளிரச் செய்வேன் நீரையும்
நெருப்பிலும் மேலாகக் கொதிக்கச் செய்வேன்
உருப்பல பல கொள்ளுவேன் பூமியில்
உள்ள பொருளைக் களவாய்த் துள்ளியெடுப்பேன் — தானத்தம்

## 8. கும்மிக்காரர்

### விருத்தம்

செப்பரு மலவத்தைப்பேர் திரு நகர்க் கிருபை யாளன்
ஒப்பிலா வீரபத்திரன் உருத்திரன் வாழு நாட்டில்
மைப் பொரு மேனி தன்னை மாகாளிதனை மன்ருடிக்
கைப்பணி குலுங்கக் கும்மிக் கன்னிமார் வருகின்ருரே



### தரு

நன்னன்ன நன்னன்ன நானுனே நன்ன நான நானன்ன
நானுனே நானன்ன நானன்ன நானுனே நன்ன
நானன் னனந்னந் நானுனே

1. அஞ்சன வேல் விழி காளியம்மன் அன்புள்ள வீரநீ வாழியென்றே
பஞ்சவர்ணக்கிளி நேர் மொழியீர் கவி பாடிக்கும்மி யடியுமடி
நடமாடிக் கும்மி யடியுமடி — நன்னன்ன

. சித்திர மேனி வேரோடிடவே வண்ணச் சிற்றிடை மேகலை
யாடிடவே, பத்திர கேள்வனைப் போற்றி செய்தே கவி
படித்துக் கும்மியடியுமடி நடன் நடித்துக் கும்மியடியுமடி — நன்ன

3. கஸ்தூரிப் பொட்டொளி தயங்கவே யிருகையும்
ஒய்யாரமாய் விளங்கவே
பத்தினிப் பெண்கள் நீராடிப் பாடிப் பயந்து கும்மியடியுமடி
இன்ப நயந்து கும்மியடியுமடி

4. உத்தமனும் வீர பத்திர சுவாமி,
உவப்பாக நல்ல வியப்பாக வாழுந்
துத்தியற் சேர் அலவத்தை நற் கோவிலைச் சூழ்ந்து
கும்மியடியுமடி, துள்ளிப்
பார்ந்து கும்மியடியுமடி — நன்னன்ன

5. பத்திர காளி கணவனடி வீர பத்திர சுவாமி துணைவனடி
சித்திர வாழும் வயிரவ சுவாமியை தேடிக் கும்மியடியுமடி
நடமாடிக் கும்மியடியுமடி — நன்னன்ன

## 9. ஊஞ்சல்

### விருத்தம்

வீரிய வான்களான வியன் கணத் தலைவர் போற்றுஞ்
சீரிய நன்மையாளன் செயவீர பத்திரன் நாட்டில்
காரிய வணங்கன் னர்கள் கனகநாபுரம் பண்பாட
பேரிய லூஞ்சலாடப் பெட்புடன் வருகின்ருரே

### தரு

தந்தனத்தேம் தானதனதந்த தானத்தேம் தானுனே

1. வித்துருமத் தூண் நாட்டி விளங்கு தங்க வளைமூட்டி
முத்துவடக் கோவையிட்டு முதிர் பசும் பொன் பலகை வைத்து
பத்திரனு யகன்வீர பத்திர கேள் வனையிருத்தி
துத்தியஞ் செய் ஊஞ்சலென்னும் தூயகவி பாடினரே — தனத்தந்

2. பொன்னை நிகர் கன்னியரே வீரப் புனிதன்ருள் போற்றி செய்தே
அன்ன ஊஞ்சல் சொல்லி நடந்தாடியூஞ்சல் பாடினுரே —தந்தனத்

3. பூவுலகந் தேங்கிடவே புன்மை யெல்லாம் நீங்கிடவே
மூவுலகுந் தேறிடவே முத்தினூஞ்சல் ஆடுவோமே

4. மாத மெல்லாம் மும்மாரி மழை பொழிய நெல் விளைய
பாதக நோய் பஞ்சமற பாடியூஞ்ச லாடுவோமே

5. பொய் களவு மாறிடவே புண்ணியங்களேறிடவே
மெய்வளர்ந்து தேறிடவே வேண்டி யூஞ்சலாடுவோமே

6. பாரின் மிடி கூடாமற் பயிர்க ளென்றும் வாடாமல்
மாரி மழைதான் சொரிய வாழ்த்தியூஞ்ச லாடுவோமே

7. வீரபத்ர சுவாமியருள் மேன்மையென்றே நாம் துதிக்க
நீருமிழ்ந்தே கார் பொழிய நினைந்து நினைந் தாடுவோமே.

## 10. குறத்தி

### விருத்தம்

நிருத்திய மேரு வன்ன நெடிஞ்சிலை கரத்திற் ருங்கி
திறத்துடன் வீர பத்ர தேவன் வாழ்ந்திருக்கும் நாட்டில்
முறத்தின் நெற் குறிகள் கூறி முகின் மூலைக் கருங்கட் செவ்வாய்
குறத்தியுஞ் சபையில் வந்து குறிப்புடன் தோற்றினளே

### தரு

தென தெந் தெனு தென தெந் தெனு தென தெந் தெனு தெனு
தென்னுதே னுதெனன்னே தென்னு னேதெந் னுனே

1. நீலமலை பவளமலை நிமலர் மலை யம்மே
நெடிய வட கிரிமுதலாம் நிலை மலை யென் னம்மே

2. கோல மிகும் புலிநகம் நம் குலத்தாலியம்மே
குன்று மணி வடம் பூட்டும் குறத்தியர் நாம் அம்மே

3. விந்த மலை நாட தெங்கள் சொந்த மலை யம்மே
வெள்ளிமலை யீசர் நமக் குள்ள விம்மானம்மே

4. செந்திமலை வேலருஞ் சம் பந்தம் நமக்கம்மே
சிறுபயிற் றிடுவீரென்று குறக் கொடி வந்தாளே

5. முறத்தி நெல்லைப் பரப்பிவையு முன்னுமொரு நெல்லை
மோசமில்லை நானெடுப்பேன் ஈசர் விடையம்மே



6. மறத்தியிவள் குறத்தியென்றுங் மனதினி லெண்ணுதே
மைந்தனைப்பார் பசியடிபின் னெந்தனைப் பாரம்மே

7. என்று பல குறிகள் சொல்லி நின்று குறவல்லி
ஏந்து மைந்தனைப் பிணித்துன் வாய்ந்த குப்பத் தணைத்து

8. கொன்றை கமழ் மன்றலம் பொற் கோடீர வீரக்
குரிசில் பதந் தொழுது குறக் கொம்பனை வந்தாளே

## 11. குறவன்

### விருத்தம்

கடகரி வதனத் திவ்ய கணபதி துணையாய் வந்த
தட நெடுஞ் சடையான் வீரத் தலைவன் வாழ்ந்திருக்கும் நாட்டில்
திடமிகு பறவை பன்றி சேர்வலை கயிறு தாங்கி
திடக மாமலை வாழ் செல்லக் குறவனும் தோற்றினரே

### தரு

தனதனதனனத் தனதனதனனத் தனதனதனனத் தனதனனு
தனனு தனனத் தனனு தனனத் தனனு தனனத் தனதனனு

குளுவனைக் கூட்டி வழிதனைக் காட்டி
குனித்து விற் பிடித்துத் கணிக்கணை தொடுத்து
செழு மலர்க் கூடும் வளைகடிச் சோடும்
செழு முடனுங்கே குறவன் வந்தனனே

## 2-ம் அச்சு

### தரு

நன்னே நான நானே நான நானே நானே நான நானே

1. பங்கயப் பெண் சிங்கியாசைப், பாரம் பண்ணித் தூரம் போனுள்,
கொங்க நாட தெங்கும் தேடி, தேடிவந்த குறவனுனே

2. மாலவற்கு மேலாம் வென்றி, வாலை வீர பத்திர நாட்டில்
வேலவற்கு மால் கொடுத்த, மின்னுள் குல மன்னனுனே

3. பட்சி யெய்து கெச்சிதங்கள், பழகும் வீ க் குளுவன்கூட
கொச்சிமலை நாடுங்கண்டு, கூடிவந்த குறவனுனே

4. இந்திர குமாரனை மல்லொத் தெறிந்த பார்த்திபன் வேற்
கந்தருக்கு பெண் கொடுத்த கானக் குறக் கோனுனே

## 12. குறவனும் குளுவனும் (தன்னுன்)

### தரு

தெய் தெய் தெய் தக்க தொம்

1: அலந்தையிலிரை தேடி யலவத்தை தனிநாட்டில்
பறவைகள் வநது பார் - குறவரையே

2: இரமத்தை விடுமப்பா பலன் மெத்த வருகுது
திருக்கண்ணி பெருக்கடா குளுவரண்ணே

3: வெருட்டி நீ முழக்காதை புரட்டி வீண் பழிக்காதை
வெடு வெடென் றெண்ணுதை நீ குறவரையே

4: அருட்டேவ வயவீரன் பொருட்டாகக் கிடைக்கும் பார்
அடிக்கடி பதுங்கடா குளுவரண்ணே

## 13. குறவனச்சு முறை

1: கண்ணி கொண்டுவாடா குளுவா கண்ணி கொண்டு வாடா
கண்ணுதல் வீரனுர் பண்ணை வயலெங்கும் கதிர் கொய்யும்
பட்சிக் கெதிராயே குத்த (கண்ணி)

2. குத்தடா குளுவா கண்ணி தன்னை குத்தடா குளுவா
குத்தடா அலவத்தை நன்மானகர் குற்றமில்லா வீர
பத்திரனுர் பண்ணை பத்தெல்லாம் பட்சி சுற்றிக்
கொத்திக் கொத்திப் பறந்தும் விரைந்தும் செறிந்தும் வருகுது
(குத்தடா)

3: காடை கௌவுதாரி மாடப்புறு முதல் காளைப் பருவங்கள்
கூழைக் கடாக்களும் பேடை நினைந்திரை தேடி
யாடிப்பாடிப் பொட்புடனே நல்லி ரைப்பாய் வருகுது
(குத்தடா)

4: குத்துறேன் வாயற் கத்துறயையே கூட்டமாக
மேல் நாட்டிலுல் வந்த சித்திரப்புறு அன்னங் காடைகள்
சீக்கிரம் தப்பி மேற் செல்லா வண்ணம் (குத்தடா)

5: வருகுதையே பறவைகள் வருகுதையே - வருகுதையே
பறவையினங்கள் வரந்தர வீரன்பு ரந்திடு நாட்டில்
குருகு செண்பகம் நாரை காணுங்கோழி கூழைக் கடாக்களும்
தாழைப் பொற் கொக்கும் (வருகுதை)



6: மேயினமையே பறவைகள் மேயினமையே மேயின
மையே பறவையினமெங்கள் வீரவான் சுவாமி விய
நகரந்தன்னில் ஆயிரம் கோடிமுகிலெல்லாம் கூடி
அலைகடல் நீரை பருகல் போலெங்கும் (மெயின்)

7: சாயினமையே பறவைகள் சாயினமையே
சாயினமையே நாவாய் மயில் கோகுலம் சண்பகம்செ
ங்கட்புறு வன்ன மாதிய நேயமுடன் வீரசுவாமி தன்
னுட்டில் நெருக்கி நருக்கி இரை கொள்ளும் பட்சிகள்
(சாயின)

## 14. நாட்டு வளப்பம்

### தரு

தெந்தின தெந்த னதெந்த னதே னதென தெந்த
நாதெந்தன தெனதென தெந்த னதெந்த
னனதே னதென தெந்த னதெந்தனனே

1. சீரணைத்தும் பொருந்திய நாடு சிவனை யர்ச்சிக்கும்
தேவிகளுடு வீரபத்திர சுவாமியை யென்று
வியந்து வாழும் நன் நாடெங்கள் நாடே (தெந்தென)

2: கந்தசுவாமி வரந்தரு நாடவர் காவியத்தின் கதைபகர் நாடு
விந்தைசேர் வீரபத்திரனும்ம் வியந்து வாழும் நல்நாடெங்கள்
நாடே

3: கம்பயானை முகத்தவனுடு கவின் ஈரண்டை புறத்தவனுடு
நம்புமன்பர்க் கருள் செய் வயிரவ னுதருக்கிரநாதர் செந்நாடே

4. காரி முத்தமிழ் ஆரியநாடு கவுரிகண்ணகை வாழு நன்னுடு
மேருவொத்த புயாசலனு மெங்கள் விரபத்திர னுடெங்கள் நாடே

5: முத்து மாரியருள் செய்யும் நாடு முகில்கள் நாளு மழை பெய்யும்
நாடு
மெத்தியே நல்விளைவுள்ள நாடெங்கள் வீரபத்திரசுவாமி தன்னுடே

6. வித்துவான்கள் உகந்திட்ட நாடு விரவு செல்வர் உறைந்திட்ட நாடு
அத்தனுர் வீரபத்திர சுவாமிக் கடியார் யாருமுறையு மின்னுடே
(தெந்தென)

## 15. பள்ளன் தோற்றம்

### விருத்தம்

திருத்தனுங் கடவுட்டிவ்ய நின்மல மூர்த்தி தந்த
திருத்தரு வீரபத்திர தேவன் வாழ்ந்திருக்கும் நாட்டில்
வரத்தியும் சிரத்திற் ருங்கி மண்வெட்டி தோளில் வைத்து
பரித்த கள்ளேப்ப மிட்டுப் பள்ளனும் தோற்றினனே

### தரு

தெந்தெனதே னதெனன்னே தென்னனே
தென்ன தெந்தத் தென்னதே னதெனன்னே
தென்னனே தென்ன

1. அச்சையிற் குதிரைகட்டி கெச்சிதங் கொண்டு துள்ளி
ஆர்ப்பரித்துத் துடைதட்டிக் காச்சிருய் கொண்டு
பச்சை நிறக் கச்சசைத்து கச்சையும் கட்டி
வீரபத்திர சுவாமி பண்ணைவயல் பள்ளன் வந்தானே

2. மூத்த பள்ளி வார்த்தை தள்ளிக் கூத்தி இளைய பள்ளி
மோசத்தனத்தாலே பள்ளன் நேசித்துத் துள்ளி
பார்த்த தேர மெல்லாமவள் கீர்த்தியைந் பண்ணி வீர
பத்திர சுவாமி பண்ணை வயற் பள்ளம் வந்தானே

3. கள்ளுடன் சராயவெறி கொள்ளுதடியே பள்ளி
கஞ்சி கொண்டு வாடி சற்றே கொஞ்ச நீவாடி
வள்ளல் வீரற் கென்னதே நீ காசன்ளி நேரடி என்று
வாய்ப் பிரசானம் பண்ணிப் பள்ளன் தோற்றினனே

5. பண்ணைக்காரன் தூறன் என்றெனை யெண்ணப் போறுனி
வயல் பார்க்கிற சமர்த் தென்னைப் போலார்க்கு முண்டோடி
கண்ணுக்குக் கண்ணன பெண்ணே நீ என்னைப் பேணடி என்று
கார்கமது பூட்டிப் பள்ளன் தோற்றினனே

## 16 மழை இரங்கல்

### விருத்தம்

மாரனங் கனையின் மூழ்கி மைந்தர்கள் மடந்தைமார்கள்
அருமோர் முறைமூப்பச்ச மறமுறையதனை விட்டே
சோரமும் கோளும் பொய்யம் துணுவும் மற்றதைப் பொறுத்து
வீரபத்திரரைப் போற்றி மிகு மழை வேண்டினேமே.



### தரு

தெந் தெனனே தென தெனனே தெந்த னதெனனே
தென்னனே

1. நெற்பயிரும் மற்றுமுள்ள நீணிலத்திற் பயிர்களெல்லாம்
சற்றுமுடல் வாடாமல் தழைவுதினம் - கோடாமல்
நற்றவரும் துதிசெய்கமில் நதியருகே மருதடிவாழ்
பொற்புமிகும் ஐங்கரனைப் போற்றி மழை வேண்டினேமே

2. மாதா கற்பு தேய்ந்தாலும் மறை முறைகளோய்ந்தாலும்
பூதலத்தில் லற முறைகள் புண்ணியங்கள் சாய்ந்தாலும்
ஒதுமல வத்தை யுறை உக்கிரனே உளமிரங்கி நீதி முறை
மழை பொழிய நித்தமருள் புரிவாயே

3. ஆலயங்கள் விளங்குவதும் அருந்தவங்கள் வழங்குவதும்
சாலைமகம் தழைவதவும் தர்மமெங்கும் விளைவதுவும்
நீலமுகிற் காரணத்தால் நிமலவடி வேல்முருகா
சாலமழை வேணுமையா சண்முகனே தந்தருள்வாய்

4. மாமேவுந் துறட்டையிட்டி வயிரவரே காளியம்மை
கோமேவும் கறண்டகையாம் குளக்கரைவாழ் மாசாத்தா
பாமேவும் புவியிலுள்ள பயிர்களெல்லாம் தேங்கிடவே
தேமேவும் மழையிரங்கத் திருவுளம் நீ ரிரங்குவீரே

## 17. குயில் கூவல்

### விருத்தம்

பூதலத்தோர் போற்று மெழிற் புங்கவனும் துங்கமுடன்
நீதிலவத்தை யெனும் திருநகரில் வீற்றிருக்கும்
ஆதிமுதல் வீர பத்திரனடியிணைகள் போற்றி செய்தே
கோதில் மனு வாழ்க வென்றே குயில் கூவத் தொடங்கினவே.

### தரு

திந்திமிக்கத் திமிதிமிக்கத் திமிதிமிக்கத் திமிதா
திமிதிமிக்கத் திமிதிமிக்கத் திமிதிமிக்கத் திமிதா

1. வேதமுத மானவமுன் விமலனருளாலோர் மன்றில்
மெய்க் களிறுடன் பிடியுமாகிச் - சேரப்
போதக முகத்தினெடு தித்த ஐங்கர முதல்வர்
பூதலத்தில் வாழ்க வென்று கூவாய் - குயிலே

2. தக்கனது வேள்வியை யழித்திட நினைந்துபர
சத்தியுமை தான் மொழிந்ததாலே - சிவன்
உக்கிர மூடேயுதவ வருவீர பத்திரனிந்த
உலகில் நித்தம் வாழ்கவென்று கூவுவாய் குயிலே

3. ஆறு பொறியாயுதித்தோர் வாவிதனில் அறுகுழந்தை
யாகி விளையாட வுமையங்கே - வந்து
வீறுடனெடுக்க முகமாறுகை பன்னிரண்டுங் கொண்ட
வேலவரும் வாழ்கவென்று கூவாய் குயிலே.

4. செய்ய சடைப் பரனெடரி சேர்ந்திட வந்துதித்த செல்வன்
திரிபுவனங்களை நாளும் காப்போன் - எங்கள்
ஐயனிரு தேவியரோ - டிருநிலத்தின் மிசை நாளும்
அருள் புரிந்து வாழ்கவென்று கூவாய் குயிலே

5. திருமருவுந் துறட்டையிட்டி வயிரவ தேவுடன்
காளிதேவியும் கண்ணகை யம்மை தானும் - செல்வத்
தருமருவும் புவியோரைக் காக்கவுளம் மீதிலெண்ணி
தாரணியில் தினம் தினமும் கூவாய் குயிலே

6. பூசுரர் மன்னவர் வணிகர் காராளர் சுரபியுடன்
பொருவில் மணிநீறும் மழைமேகம் - என்றும்
தேசுஸ்ரீ வீரபத்ரர் காளியம்மை அலவத்தை
திருநகரும் வாழ்கவென்று கூவாய் குயிலே

## 18. மழை பெய்தல்

### தரு

தன தன தனனத் தனதன தனனத் தனதன தனனத் தனதனனு
தனனு தனனத் தனனு தனனத் தனனு தனனத் தன தனனு

1. கருமுகில் பரவிக் களைகடல் பெருகிக் கனரிசி விசிறிக் கவின் கொழ
கடவுளர் வெருவிச் சடசட சடெனக் கறங்கியேறுகள் முழங்கியே
அருள்தரு செயபத் திருநகர் முதல் தொட்டளவையில் கம்பிற்
குளமுதலாம்
அலங்கல் நீர்வயல் நிரம்பவே புடை அதிர்ந்து மாமழை பொழிந்
ததே

2. செவிமிசை வளர்பற் பலபயிர் வகைநற் புனலகில் மதியிற்
குறைந்ததால்
புகலென வரசர்க் குணமனுடர்களப் பொழுது விண்ணரசைத்
துதிக்கவே
செவிமிசை இவர் சொற்புகமக பதியத் தினமுளமது சற்றிரங்கியே
செறிமுகில் களையிக் கணமழை புவனித் திசை பொழிகென அத்
திறங்கொளா



குரைகடல் பருகிக் கருநிறமருவிக் கொளமிடல் விரவிப் பரந்துரு
குலகிரி அசையப் பலபணி நெளியக் குமுத முழங்கித் துலங்கியே
தரையிடை இவலைத் துளிமழை வருமுன் தருபெருமளவைப்
படங்குலும்
சடசட சடெனச் சடசட சடெனச் சடசட சடெனப் பொழிந்
ததே
கரிமுகனுடனுக் கிரனறு முகன் மெய்த் தகுபுரவியிலுற்றுறைந்
தால்
கடல் நிறவண்ணக் கண்ணகை முதலெக் கடவுளர் உறைநற்
புலங்களிற்
திரைமழை வெருவிப் பெருகிய நதிநற் திருவயல்களில் நெற்புலங்
களில்
திடுதிடு திடெனத் திடுதிடு திடெனத் திடுதிடு திடெனப் பொழிந்
ததே

## 19. வெள்ளப் பாய்ச்சல்

### தரு

தென தெந் தெனனத் தெனதெந் தெனனத் தெனதெந் தெனனத்
தென தென்னு. தென்னு தெனனத் தென்னு தெனனத் தென்னு
தெனனத் தென்னுனே

தேசுற்றலர்ந்த வாசக்கமலச் செடியைப் பிடுங்கிக் கடுகுலாஞ்
சிலையைப் புரட்டி மலையையு ருட்டித் திரையெறிந்திரு கரையெல்
லாம்
வீசிக் குமட்டிக் கோலக் கரும்பின் வேருடன் பறித்தாசினி
வீட்டிற் சந்தகிற் கூட்டமானதை வேய்ந்து வெள்ள நீர் பாய்ந்ததே

பாலை காலை நெத்தலி கத்தலை பருத்த சுறவு பெருத்தசேல்
பாய்ந்து துள்ளியே கூந்தற் கமுகின் படப்பையும் தள்ளிக் கடக்கவே
வேலை ஞால மேலும் பரவி விரைந்து மிரைந்துந் தரங்கமே
வீசிப் புட்குலம் கூவிப்பறக்க வெருட்டி வெள்ளநீர் பாய்ந்ததே

பாரும் நடுங்கத் திசையும் நடுங்கப் பனியும் நடுங்கப் பணி நல்லார்
பதறி நடுங்க ஒரெண்நரிகள் கதறி ஒடுங்கப் புவியின் மேல்
ஆருந் கொன்றையும் அகிலும் பலவும் ஆலும் நற்கரு வேலுடன்
அரிய தருக்கள் பிடுங்கி நடுங்கி அவனிமேல் வெள்ளம் பாய்ந்ததே

வனத்திலே வனவேடருறையும் மனையதாம் சிறுகுடில்களுள்
வாருதிக் கிணையான நீர் சென்று வனசரப் பெண்கள் மகிணர்கள்
இனத் தொடையலை எறிந்து வாரி எடுத்தும் அசைத்தும் தாக்கியே
இரைந்தும் பரந்தும் துரந்து வெள்ளநீர் எங்கும் பாய்ந்து நின்றதே

## 20. நாற்று நடவு

### விருத்தம்

சுள்ளினைக் கடித்துக் கொண்டு தூய்மையில்லாத வாசக்
கள்ளினைக் குடித்துச் சித்தம் கலங்கியே தெளிந்த பின்பு
அன்னலம் பழனந்தன்னில் அணி நாற்றை நடத் தொடங்கி
பள்ளிகள் சபையில் வந்து பரிவுடன் தோற்றினரே

### தரு

தெனதெந் தெனனத் தெனதெந் தெனனத் தெனதெந்
தெனனத் தெனதென்ன தென்ன தெனனத் தென்ன
தெனனத் தென்ன தெனனத் தென்னனே

1. வண்ணைக் கறுப்பி மாதிபூதி வாக்குக் கண்ணி நற்காக்கைச்சி
வாரிசூரி மயிலி குயிலி வளத்தியும் வந்து வயலிலே
பொன்னைத் திலங்கு செந்நெற்பயிரை பொலிய நெருங்கி மருங் கலாம்
பொருவில் நாற்றை தெரிந்து நடுற புதினம் பாரும் பள்ளீரே

2. வளைத்தங்கலவன் கிளைத்து துளைத்து வரம்பு நீரேல்லாம் ததும்பவே
வாழை குதித்து தாழை மடற்குள் வதிந்து சயனம் பொருந்தவே
குளித்து நெளித்து குளத்திற் சேர்த்துக் குரவைக் கூத்து பரதமாம்
கூடியாடிப் பாடி நாற்று குனிந்து நடுவோம் பள்ளீரே

3. கட்டைச் சறுப்பி கனத்த சிறுக்கி கடுத்த முகத்தி கருங்கண்ணி
கடுகடுத்தவள் வெடுவெடுத்தவள் களகளத்தவளுடனல்லாய்
மட்டுக் கமழும் மதுவைப்பருகி மயங்கிச் சித்தம் இயங்கியே
வயிலிலே நின்று நாற்று நடுற மாதிரி பாரும் பள்ளீரே

4. முதுகை நெளித்துத் தலையைக் குனிந்து மூசியேசிப் பேசியே
முரட்டுப் பள்ளியும் திருட்டுக் கள்ளியும் முடத்தியும் படபடத்தியும்
அதிசய முடனெவரும் பார்த்து நின்றங்களித்திட துரந்தங்கே
ஆடிப்பாடி நாற்று நடுநல் லழகைப் பாரும் பள்ளீரே

## 21. அருவி வெட்டல்

### விருத்தம்

சகமெல்லாம் சிறக்க வோங்கித் தழைவுடன் வளர்ந்து சாலி
மிகுதிநீர் நின்று முற்றி விளைந்த பக்குவத்தைக் கண்டே
அகமகிழ் வெய்தித் தெய்வம் பரவியங்கங்கே கூடிப்
பகுதியாய் அருவி வெட்டப் பள்ளர்கள் தொடங்கினரே



### தரு

தந்தன தந்தன தான தனதான தந்தன தான தனதான
தந்தன தானதந்தன தானதந்தன தானின

1. பொன்னகர் மன்னனைப் போற்றி பொங்கல் பூரித்து நன்மடை யாற்றி
கொண்டரு வாள்கையில் எடுத்தே செந்நெல் கொய்திடுவீர் பள்ளரே

2. வாத்திய மேளங்கள் அடித்துச் செந்நெல் வாரியிட்டுக் கையாற் பிடித்து
தாளியில்லாமலே அருவி வெட்டும் தன்மையைப் பாரும் பள்ளாரே

3. மத்தள தாளங்கள் மோத நல்ல வித்தாரமாய் தரையூத
வீரபத்திர சுவாமியைப் போற்றி நெல்லு வெட்டிப் போர் கட்டும் பள்ளாரே

4. வெட்டிக் கட்டும் போரிலங்கும் மகாமேரு வொப்பாகத் துலங்கும்
விட்டுப் போகாமலிப்போதே நாம் மிதித்திட வாரும் பள்ளாரே

5. ஏறும் கடாக்களும் கூடிப் பிணைந்தேற்றியே போர் உருமாற்றி
கூறும் பரமனைப் போற்றி அண்டர் கோனுக்கும் தோத்திரம் சாற்றி

## 22. கப்பல் ஆட்டம்

### தரு

ஏலேலோ தத்தெய்யதாம் ஏலேலோ

தென்னிலங்கை மகராசன், அபுராம்
செப்பிய சொல், தவறுமல்

(ஏலேலோ)

துன்னியே பிடித்துவர சிப்பாயிமாரை
துரிதமுடனே கப்பல் ஏறியே செல்ல
மன்னு அப்துல்காரன் நங்கூரம் இழடா
மஸ்தானும் சுல்தானும் திருப்புங்கள் கப்பல்
பின்னணியில் அசன் உசனும் மகமதுவும் இரடா
பெருமையுறு மல்தகனி கோசிலே வாடா
சொன்னபடி வைசரிப் பாய்தன்னைத் தூக்கு
சுழுவாக வாய்ப்புக்கனி சாயவிட் டோடடா
உன்னையே யல்லாமல் போற்றித் துதித்து
உந்திதனிலே கப்பல் ஓடவிடுவோமே

(ஏலேலோ)

தரு

தந்தன தந்தன தான தனதான தந்தன தான தனதான
தந்தன தானதந்தன தானதந்தன தானின

1. பொல்லுகர் மன்னனைப் போற்றி பொங்கல் பூரித்து நன்மடை யாற்றி
கொண்டரு வாள்கையில் எடுத்தே செந்நெல் கொய்திடுவீர் பள்ளரே
2. வாத்திய மேளங்கள் அடித்துச் செந்நெல் வாரியிட்டுக் கையாற் பிடித்து
தாளியில்லாமலே அருவி வெட்டும் தன்மையைப் பாரும் பள்ளாரே
3. மத்தள தாளங்கள் மோத நல்ல வித்தாரமாய் தரையூத
வீரபத்திர சுவாமியைப் போற்றி நெல்லு வெட்டிப் போர் கட்டும் பள்ளாரே
4. வெட்டிக் கட்டும் போரிலங்கும் மகாமேரு வொப்பாகத் துலங்கும்
விட்டுப் போகாமலிப்போதே நாம் மிதித்திட வாரும் பள்ளாரே
5. ஏறும் கடாக்களும் கூடிப் பிணைந்தேற்றியே போர் உருமாற்றி
கூறும் பரமனைப் போற்றி அண்டர் கோனுக்கும் தோத்திரம் சாற்றி

## 22. கப்பல் ஆட்டம்

தரு

ஏலேலோ தத்தெய்யதாம் ஏலேலோ

தென்னிலங்கை மகராசன், அபுராம்
செப்பிய சொல், தவறுமல்

(ஏலேலோ)

துன்னியே பிடித்துவர சிப்பாயிமாரை
துரிதமுடனே கப்பல் ஏறியே செல்ல
மன்னு அப்துல்காரன் நங்கூரம் இழடா
மஸ்தானும் சுல்தானும் திருப்புங்கள் கப்பல்
பின்னணியில் அசன் உசனும் மகமதுவும் இரடா
பெருமையுறு மல்தகனி கோசிலே வாடா
சொன்னபடி வைசரிப் பாய்தன்னைத் தூக்கு
சுழுவாக வாய்ப்புக்கனி சாயவிட் டோடடா
உன்னையே யல்லாமல் போற்றித் துதித்து
உந்திதனிலே கப்பல் ஒடவிடுவோமே

(ஏலேலோ)



நீர்கொழும்பு தெரியுதடா
தென்றல் நேராக வீசுதடா
சீரான புத்தளத்தை சேரத் திருப்பிவிடு சுக்கானை

(ஏலேலோ)

பேரானை கற்பிட்டி குதிரைமலை முனையும்
பெருமையுடனே கப்பல் கிட்டித் திருப்பி
ஏலஞ்சிலாபமும் மன்னருங்கண்டு
ஏழில்மேவும் பாம்பன் வாய்க்காலிலே அண்டி
கூர்மையுடனே கச்சதீவிதோ தோணுது
கொடியகடல் தானுமிது நெடுந்தீவு தாண்டி

(ஏலேலோ)

ஊர்காவலேயுள்ள கடற்கோட்டையினை நோக்கி
ஒழியாகவை சரிப்பாய் தனியிறக்கு நேராக
யாழ்ப்பாணம் தெரியுதடா — இப்போ
நிலையான நங்கூரம் போடலுப் பாந்தியில்
ஆர்வமுடனே பெரிய பாய்தனை யிறக்கு
அண்டு பீரங்கி வெடி தீருங்களப்பா

(ஏலேலோ)

சிங்கார அபிராம் மன்னன் காவற்சிப்பாய்மாரே
கூடவிடு நங்கூரமிடுங்களடா
கிலாசர் நல்ல பாயைத் தூக்குமடா

(ஏலேலோ)

தங்காமலே கப்பல் தனையோட விடுங்கள்
சமுக்காவும் கொம்பாசும் சல்தியெடுங்கள்
புங்கமில்லூர் காவல் காங்கேசன் தாண்டி
பனைமுனையும் பருத்தித்துறை முனைபூண்டி
துங்கமுல்லைத்தீவு திருக்கோணங் கோட்டை
தோணுகுது மட்டக்கிழப் அம்பாந்தோட்டை

## 23 சோபனம்

1. சோபனம் சொல்லுங்கடி — பாங்கிமாரே
தோத்திரம் செய்யுங்கடி
2. பாவம் பழிமாற — உலகெங்கும்
பாக்கிய மீதேற
தேவன் கணபதியாம் — கடவுளைச்
சிந்தித் திறைஞ்சுவோமே

நீர்கொழும்பு தெரியுதடா
தென்றல் நேராக வீசுதடா
சீரான புத்தளத்தை சேரத் திருப்பிவிடு சுக்கானை
(ஏலேலோ)

பேரானை கற்பிட்டி குதிரைமலை முனையும்
பெருமையுடனே கப்பல் கிட்டித் திருப்பி
ஏலஞ்சிலாபமும் மன்னாருங்கண்டு
ஏழில்மேவும் பாம்பன் வாய்க்காலிலே அண்டி
கூர்மையுடனே கச்சதீவிதோ தோணுது
கொடியகடல் தானுமிது நெடுந்தீவு தாண்டி
(ஏலேலோ)

ஊர்காவலேயுள்ள கடற்கோட்டையினை நோக்கி
ஒழியாகவை சரிப்பாய் தனியிறக்கு நேராக
யாழ்ப்பாணம் தெரியுதடா — இப்போ
நிலையான நங்கூரம் போடலுப் பாந்தியில்
ஆர்வமுடனே பெரிய பாய்தனை யிறக்கு
அண்டு பீரங்கி வெடி தீருங்களப்பா
(ஏலேலோ)

சிங்கார அபிராம் மன்னன் காவற்சிப்பாய்மாரே
கூடவிடு நங்கூரமிடுங்களடா
கிலாசர் நல்ல பாயைத் தூக்குமடா
(ஏலேலோ)

தங்காமலே கப்பல் தனையோட விடுங்கள்
சமுக்காவும் கொம்பாசும் சல்தியெடுங்கள்
புங்கயில்லூர் காவல் காங்கேசன் தாண்டி
பனைமுனையும் பருத்தித்துறை முனைபூண்டி
துங்கமுல்லைத்தீவு திருக்கோணங் கோட்டை
தோணுகுது மட்டக்கிழப் அம்பாந்தோட்டை

## 23 சோபனம்

1: சோபனம் சொல்லுங்கடி — பாங்கிமாரே
தோத்திரம் செய்யுங்கடி

2: பாவம் பழிமாற — உலகெங்கும்
பாக்கிய மீதேற
தேவன் கணபதியாம் — கடவுளைச்
சிந்தித் திறைஞ்சுவோமே



3. ஈசனைப் பார்வதியைச் — செவ்வேளை
இறைஞ்சித் துதிகள் செய்தே
காசினி உள்ளோர்கள் — சுகம்பெறக்
கைகொட்டி ஆடுவமே

4. மாவீர பத்திரனைத் — தொழுது
வயிரவனைத் துதித்தே
காவலன் ஐயனையும் — பணிந்து நாம்
காதலோடாடுவமே

5. எண்ணிய காரியங்கள் — அடியவர்
எண்ணப்படி யருளும்
கண்ணகையம்மாளைத் — துதித்து நாம்
கைகுவித் தாடுவமே

6. மற்றுள்ள தெய்வங்களை — வழுவாமல்
வைகலும் போற்றி செய்தே
குற்றங்கள் வாராமல் — அருள் பெறக்
கூடி நாம் ஆடுவமே

7. மாதமும் மாரி பெய்ய — அகங்கள்
மகிழ்ந் துலகெங்கு முய்ய
நாதனருள்க வென்றே — சொல்லிச் சொல்லி
நாம் குதித் தாடுவமே

8. ஐந்தெழுத்தும் வாழி — திருநீறும்
ஆனினமும் வாழி
இந்தச் சிவ மயம் — சுகத்துடன்
என்றென்றும் வாழியவே

# நன்றி நவிலல்

++++++++++++++++++++++++++++++++

எமது அன்பின் செல்வர் கடந்த 01-06-1984ல் அமரத்துவம் எய்திய ஞான்று நேரில் வருகை தந்தும், அஞ்சல், தந்திச், செய்திகள் மூலம் அநுதாபம் தந்தும், ஆறுதல் நல்கிய உற்றுர், உறவினர், நண்பர்கள் அன்னுரது தொழிற்கள சகவூழியர்கள், மேலதிகாரிகள், மற்றும் அனைவருக் கும் எமது இதய பூர்வமான நன்றியை நவின்று நிற் கின்றேம்.

தென்மயிலே,
தெல்லிப்பழை;
01-07-1984;

இங்ஙனம்
மனைவி, தாய் தந்தை,
சகோதர சகோதரிகள், மைத்துனர்கள்.

அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி;

3. ஈசனைப் பார்வதியைச் — செவ்வேளை
இறைஞ்சித் துதிகள் செய்தே
காசினி உள்ளோர்கள் — சுகம்பெறக்
கைகொட்டி ஆடுவமே

4. மாவீர பத்திரனைத் — தொழுது
வயிரவனைத் துதித்தே
காவலன் ஐயனையும் — பணிந்து நாம்
காதலோடாடுவமே

5. எண்ணிய காரியங்கள் — அடியவர்
எண்ணப்படி யருளும்
கண்ணகையம்மாளைத் — துதித்து நாம்
கைகுவித் தாடுவமே

6. மற்றுள்ள தெய்வங்களை — வழுவாமல்
வைகலும் போற்றி செய்தே
குற்றங்கள் வாராமல் — அருள் பெறக்
கூடி நாம் ஆடுவமே

7. மாதமும் மாரி பெய்ய — அகங்கள்
மகிழ்ந் துலகெங்கு முய்ய
நாதனருள்க வென்றே — சொல்லிச் சொல்லி
நாம் குதித் தாடுவமே

8. ஐந்தெழுத்தும் வாழி — திருநீறும்
ஆனினமும் வாழி
இந்தச் சிவ மயம் — சுகத்துடன்
என்றென்றும் வாழியவே;

# நன்றி நவிலல்

எமது அன்பின் செல்வர் கடந்த 01-06-1984ல் அமரத்துவம்
எய்திய ஞான்று நேரில் வருகை தந்தும், அஞ்சல்,
தந்திச், செய்திகள் மூலம் அநுதாபம் தந்தும்,
ஆறுதல் நல்கிய உற்ருர், உறவினர், நண்பர்கள்
அன்ரைது தொழிற்கள சகவூழியர்கள்,
மேலதிகாரிகள், மற்றும் அனைவருக்
கும் எமது இதய பூர்வமான
நன்றியை நவின்று நிற்
கின்ருேம்.

தென்மயிலை,
தெல்லிப்பழை;
*01-07-1984;*

இங்ஙனம்
மனைவி, தாய் தந்தை,
சகோதர சகோதரிகள், மைத்துனர்கள்.

அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி;